

தூத்துகுடி மாவட்டம் – ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தொடங்கி வைத்தார். மேலும் பல புதிய கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் சுபம் தாக்கரே ஞானதேவ்ராவ், சார் ஆட்சியர் கௌரவ்குமார், ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்கொடி, சுப்பிரமணியன், சரவணக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பேரிடர் நிவாரண நிதியாக ரூ.10 கோடி வழங்கிய

# தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## இமாச்சலப் பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சமூக வலைதளத்தில் பதிவு

சிம்லா, ஆக. 26 -

இமாச்சலப் பிரதேச பேரிடர் நிவாரண நிதி 2023க்கு ரூபாய் 10 கோடி நிதி வழங்கியமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இமாச்சலப் பிரதேச முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுகு அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு :-



இமாச்சலப் பிரதேச பேரிடர் நிவாரண நிதி 2023க்கு ரூ.10 கோடி நிதியை பெருந்தன்மை யாக வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் ஆதரவு பேரிடர் காலங்களில் ஒற்றுமை மற்றும் பரிவுணர்வை பிரதிபலிக்கிறது. தொடர்ந்து ஒன்றிணைந்து கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவோம்.

இவ்வாறு இமாச்சலப் பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு தெரிவித்தார்.

### டெல்டா மாவட்டங்களில் சுற்றுப் பயணம்:

# திருச்சியில் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்!

திருச்சி, ஆக. 26 -

டெல்டா மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காக சென்னையிலிருந்து திருச்சி சென்ற ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருவாரூர், நாகை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து விமானம் மூலம் விமான நிலையத்தில், முதலமைச்சருக்கு அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யா மொழி ஆகியோர் தலைமை யில் தி.மு.க. நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து திருச்சி விமான நிலையத்தில் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து விமான நிலையத்திற்கு வெளியே நூற்றுக் கணக்கானோர் திரண்டு நின்று முதலமைச்சருக்கு வரவேற்பு அளித்தனர். காரில் இருந்து இறங்கிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நடந்தே சென்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் சாலை வழியாக கும்பகோணம் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுகிலும் பொதுமக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். சாலையில் நின்று கொண்டிருந்த பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களையும் முதலமைச்சர் பெற்றுக் கொண்டார்.

### தே.மு.தி.க. நிறுவனர்

# விஜயகாந்த் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக. 26-

தே.மு.தி.க. நிறுவனர் நடிகர் விஜயகாந்தின் பிறந்தநாளை முன்னிட்டு, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அந்த சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**தே.மு.தி.க நிறுவனத் தலைவரும், எனது தோழருமான விஜயகாந்த் அவர்களுக்கு உளங்கனிந்த பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**முழு உடல் நலத்துடன் புத்துணர்ச்சியையும் பெற்றுப் பல்லாண்டு நீங்கள் மகிழ்ச்சியோடும் நிறைவோடும் வாழ வேண்டுமென விழைகிறேன்.**



இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### உசிலம்பட்டியில்

# முதலமைச்சரின் காலை உணவு திட்டம்!

## அ.தி.மு.க. எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

மதுரை, ஆக. 26-

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே சீமானுத்து அரசு துவக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை உசிலம்பட்டி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அய்யப்பன், மாணவமாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தி திட்டத்தை துவக்கி வைத்தார். உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தி.மு.க. சேர்மன் ரஞ்சனி சுதந்திரம், சீமானுத்து ஊராட்சி மன்ற தலைவர் அஜித்பாண்டி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை உதவி திட்ட அலுவலர் பாரதிதாசன் தலைமையிலான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை உசிலம்பட்டி அருகே சீமானுத்து அரசு தொடக்கப் பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை உசிலம்பட்டி அதிமுக எம்.எல்.ஏ. அய்யப்பன் தொடங்கி வைத்தார்!

### நேபாளத்தில் சாலை விபத்தில்

## 6 இந்திய யாத்ரீகர்கள் உட்பட 7 பேர் பலி!

காத்மண்டு,ஆக. 26–

நேபாளத்தின் பாரா மாவட்டத்தல் நடந்த சாலை விபத்தில் 6 இந்தியர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர். விபத்தில் காயமடைந்த 19 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காத்மண்டுவில் இருந்து ஜனக்பூருக்குச் சென்று கொண்டிருந்த பஸ், இந்திய யாத்ரீகர்களை ஏற்றிச் சென்றபோது, பாராவில் உள்ள சூரியாமை அருகே விபத்து ஏற்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது. இரண்டு ஓட்டுநர்கள் மற்றும் ஒரு உதவியாளர் உட்பட மொத்தம் 27 பேர் பஸ்சில் இருந்தனர்.

இதில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. இதனால், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. உயிரிழந்த இந்தியர்களின் உடல் அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்க அந்நாட்டு அரசு ஏற்பாடு செய்து உள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்டம், நேற்று (25.08.2023) திருக்குவளையில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சென்னையில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு – பங்களாதேஷ் இடையேயான நல்லுறவு பல்வேறு பிரிவுகளில் வலுப்படுத்துவது தொடர்பாக இந்தியாவுக்கான பங்களாதேஷ் துணைத் தூதர் ஷெல்லி சலேகின் –னை தமிழ்நாடு இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து பேசினார்.

### 69-வது தேசிய திரைப்பட விழாவில் விருதுபெற்ற

# ‘கடைசி விவசாயி’ படக்குழுவினருக்கு பாராட்டுகள்!

## விருது பெற்ற மேலும் பலருக்கும் வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஆக.26 -

65-வது தேசிய திரைப்பட விழாவில் விருது பெற்றவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**69ஆவது தேசிய திரைப்பட விருதுகளில் தமிழில் சிறந்த படமாகத் தேர்வாகியிருக்கும் கடைசி விவசாயி படக்குழுவினருக்கு என் பாராட்டுகள்.**

**மேலும், இரவின் நிழல் படத்தில் ‘மாயவா சாயவா’ பாடலுக்காகச் சிறந்த பின்னணிப் பாடகி விருதை வென்றுள்ள ஸ்ரேயா கோசல், கருவறை ஆவணப்படத்துக்காகச் சிறப்புச் சான்றிதழ் வென்றுள்ள இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா, சிறந்த கல்வித் திரைப்படத்துக்கான பிரிவில் விருதுக்குத் தேர்வாகியுள்ள சிற்பிகளின் சிற்பங்கள் படக் குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அதிர்ச்சி**

மறுபுறம், சர்ச்சைக்குரிய திரைப்படம் என நடுநிலையான திரை விமர்சகர்களால் புறக்கணிக்கப்பட்ட திரைப்படத்துக்குத் தேசிய ஒருமைப்பாட்டுக்கான நர்கீஸ் தத் விருது அறிவிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

இலக்கியங்கள், திரைப்படங்களுக்கு அளிக்கும் விருதுகளில் அரசியல் சார்புத்தன்மை இல்லாமல் இருப்பதுதான் அந்த விருதுகளைக் காலங்கடந்தும் பெருமைக்குரியவையாக உயர்த்திப் பிடிக்கும். மலிவான அரசியலுக்காகத் தேசிய விருதுகளின் மாண்பு சீர்குலைக்கப்படக் கூடாது.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

### ஆத்தூரில்

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## அமைச்சர் இ. பெரியசாமி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல், ஆக.26-

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்.இ.பெரியசாமி திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், செட்டியபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா. பூங்கொடி, தலைமையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, அவற்றை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதோடு, தேர்தல் நேரத்தில் அறிவிக்காத பல்வேறு திட்டங்களை அறிவித்து, அத்திட்டங்கள் அனைத்தும் கடைகோடி மக்களையும் சென்றடையும் வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார். குழந்தைகள் நலனிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறார். மாணவ, மாணவிகளின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதுடன், அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

இன்றைய குழந்தைகள் தான் நாளை எதிர்கால சமுதாயம் என்பதை அறிந்து, அவர்களுக்கு கல்வி அளிக்கவும், பசியின்றி கல்வி கற்கவும் அரசு தொடக்கப்பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். குடும்ப சூழ்நிலை காரணமாக பெரும்பாலான குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது காலை உணவு சாப்பிடாமல் வருகின்றனர் என்பதை அறிந்து, அவர்களின் வயிற்றுப்பசியை நீக்க இத்திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தில் வாரத்தில் 5 முட்டைகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார். அந்த வகையில் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 15.09.2022 அன்று மதுரையில் தொடங்கி வைத்தார்கள். தற்போது, இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் அனைத்து அரசு தொடக்கப்பள்ளிகளிலும் செயல்படுத்தும் பணியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்குவளையில் தொடங்கி வைத்துள்ளார். இத்திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் அனைத்து நகர்ப்புற பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள 31,008 அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 17 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் முதற்கட்டமாக, திண்டுக்கல் மாநகராட்சி மற்றும் கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள தொடக்கப்பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு, முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் பணி தொடங்கப்பட்டது. அதன்படி, ஊராட்சிப் பகுதிகளில் 34 பள்ளிகளைச் சேர்ந்த 951 மாணவ, மாணவிகளுக்கும், நகர்ப்புறங்களில் 15 பள்ளிகளைச் சேர்ந்த 1354 மாணவ, மாணவிகளுக்கும், என மொத்தம் 49 பள்ளிகளைச் சேர்ந்த 2,305 மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் காலை உணவு வழங்கும் பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதையடுத்து, திண்டுக்கல் மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் 1,034 பள்ளிகளைச் சேர்ந்த 53,715 மாணவ, மாணவிகளுக்கும், நகர்ப்புறத்தில் 28 பள்ளிகளைச் சேர்ந்த 2,310 மாணவ, மாணவிகளுக்கும், என மொத்தம் 1,062 பள்ளிகளைச் சேர்ந்த 56,025 மாணவ, மாணவிகளுக்கு காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு நேற்று (25.08.2023) முதல் காலை உணவு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக திண்டுக்கல் மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த 1068 பள்ளிகளில் பயிலும் 54,666 மாணவ, மாணவிகள், நகர்ப்புறங்களைச் சேர்ந்த 43 பள்ளிகளில் பயிலும் 3,664 மாணவ, மாணவிகள் என மொத்தம் 1111 பள்ளிகளில் பயிலும் 58,330 மாணவ, மாணவிகள் பயனடைகின்றனர்.

இத்திட்டத்தின்படி. பள்ளிகளில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் வெண் பொங்கலுடன் காய்கறி சாம்பார், செவ்வாய் கிழமைகளில் ரவா காய்கறி கிச்சடி, புதன்கிழமைகளில் அரிசி உப்புமாவுடன் காய்கறி சாம்பார், வியாழக் கிழமைகளில் வரகு பொங்கலுடன் காய்கறி சாம்பார், வெள்ளிக் கிழமைகளில் சாமை கிச்சடி மற்றும் ரவா கேசரி (இனிப்பு) ஆகியவை சமைத்து மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. சமையல் மையப் பொறுப்பாளர்களுக்கு அந்தந்த வட்டாரங்களில் தனித்தனி குழுவாக பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்தார்.